# அலகுத் தேர்வு -3

## அத்தியாயம் - 5, 6, 7 & 8

## பன்னிரெண்டாம் வகுப்பு ------ வணிகவியல்

காலம் : 1.15 நிமிடம் மதிப்பெண்கள் : 45

### பகுதி ---- I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். $10 \times 1 = 10$

1. மூதனச் சந்தையின் பங்கேற்பாளர் -------------- ஆவர்.
   அ) தனிநபர் ஆ) நிறுமங்கள் இ) நிதி நிறுவனங்கள் ஈ) மேலே உள்ள அனைத்தும்

2. 1947 முதல் ----------- வரையிலான காலத்தை மூலதன சந்தையின் கட்டமைப்புக்கான வளர்ச்சிக் காலம் என்று கூறலாம்.
   அ) 1973 ஆ) 1972 இ) 1971 ஈ) 1970

3. வேறுபட்ட ஒன்று எது?
   அ) தங்கம் ஆ) எண்ணெய் இ) பருத்தி ஈ) ரப்பர்

4. நம்பிக்கையுள்ள வணிகர் என்பவர் -------------
   அ) காளை ஆ) கரடி இ) மான் ஈ) வாத்து

5. கூற்று ( A ) : பங்கு மாற்றகம், அலுவல் பட்டியலில் இடம் பெற்றிருக்கும் பத்திரங்களை மட்டுமே வாங்கி விற்க அனுமதிக்கிறது.
   காரணம் (R) : பட்டியலிடப்படாத பத்திரங்கள் பங்குச் சந்தையில் வர்த்தகம் செய்ய முடியாது.
   அ) A மற்றும் R இரண்டும் சரி ஆனால் R என்பது சரியான விளக்கம் அல்ல.
   ஆ) A மற்றும் R இரண்டும் சரி . மேலும் R என்பது சரியான விளக்கம்
   இ) A சரி ஆனால் R தவறு
   ஈ) A தவறு ஆனால் R சரி

6. காகித வடிவிலான பங்குகளை மின்னணு வடிவில் மாற்றுவதற்கான செயல்முறை ------------ ஆகும்.
   அ) புறத்தோற்றமற்ற பத்திரங்கள் ஆ) பட்டியலில் இருந்து விலக்குதல்
   இ) புறத்தோற்றம் உள்ள பத்திரங்கள் ஈ) தடையுள்ள பத்திரங்கள்

7. செபியை நிர்வகிப்பவர்கள் அதன் ----------------
   அ) இயக்குநர்கள் ஆ) கூடுதல் இயக்குநர்கள்
   இ) இணை இயக்குநர்கள் ஈ) உறுப்பினர்கள்

8. சரியான கூற்று யாது?
   அ) செபி, பங்கு சந்தைகளில் வியாபாரத்தை ஒழுங்குபடுத்துதல் மற்றும் கட்டுப்படுத்துகிறது.
   ஆ) செபி, பத்திரங்களில் உள்வழி வர்த்தகத்தை தடைசெய்வது இல்லை.
   இ) செபி, இந்திய அரசால் 1988 - ல் உருவாக்கப்பட்டு, சட்டமுறை அதிகாரம் வழங்கப்பட்டது.
   ஈ) செபிக்கு, ஒதுக்கப்பட்டுள்ள பணிகள் குறித்து நடவடிக்கைகளை ஆரம்பிக்க அதிகாரம் இல்லை.

9. பொருத்துக

1) தங்க முனை பத்திரங்கள் --- a. சுய நீர்மைத்தன்மை கொண்டவை
2) வணிக இரசீது --- b. குறைந்தளவு நீர்மத்தன்மை கொண்டவை
3) மூலதனச் சந்தை ---- c. அதிகளவு நீர்மத்தன்மை கொண்டவை
4) கருவூல இரசீது --- d. பலவகை நீர்மத்தன்மை கொண்டவை

அ) c d a b ஆ) d a b c இ) a b c d ஈ) c a d b

10. வணிகமாற்றுச் சீட்டுகளை வாங்குவதற்கும் விற்பதற்குமான சந்தையை ---------- என்று அழைக்கலாம்.

அ) வணிகத்தாள் சந்தை ஆ) கருவூல இரசீது சந்தை
இ) வணிக இரசீது சந்தை ஈ) மூலதனச் சந்தை

## பகுதி --- II

<u>எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 16 - க்கு கட்டாயம் விடையளிக்கவும்.</u> $4 \times 2 = 8$

11. அரசுப் பத்திரங்கள் சந்தை என்றால் என்ன?
12. துணைசந்தைகளுக்கு எடுத்துக்காட்டுகள் தருக.
13. பரஸ்பர நிதி வணிகத்தில் ஈடுபடுகின்ற வங்கிகள் யாவை?
14. மூலதனச் சந்தையில் விலை எவ்வாறு நிர்ணயம் செய்யப்படுகிறது?
15. தலால் தெரு - விளக்குக.
16. வர்த்தகம் என்பது தற்போது மிகவும் வசதியாகி விட்டது. எதனால்?

## பகுதி --- III

<u>எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும்.அவற்றில் வினா எண் 22 - க்கு கட்டாயம் விடையளிக்கவும்.</u> $4 \times 3 = 12$

17. OTCEI ( இந்திய உடனடி பங்கு மாற்றகம்) - சிறு குறிப்பு வரைக.
18. வைப்புச் சான்றிதழ் சந்தை என்றால் என்ன?
19. பணச்சந்தையில் ஈடுபடும் பங்கேற்பாளர்கள் யாவர்?
20. இந்தியாவில் உள்ள ஏதேனும் 6 பங்குகளை பற்றி எழுதுக.
21. பல்வேறு அடையாள ஆதாரங்கள் யாவை? (ஏதேனும் 6 )
22. தேசிய தீர்வைகள் மற்றும் வைப்பு முறை ஏற்படுத்தப்பட்டதின் நோக்கம் யாது?

## பகுதி --- IV

<u>அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.</u> $3 \times 5 = 15$

23. <u>குறிப்பு வரைக</u>

1) துணிகர நிதி நிறுவனம் 2) பரஸ்பர நிதி 3) ஏட்டுக் கடன் தரகு முகமை நிறுவனங்கள்

( அல்லது )

வணிக இரசீதின் வகைகளை விவரி.

24. பங்கு பரிவர்த்தனைக்கும் பண்டமாற்று பரிவர்த்தனைக்கும் உள்ள வேறுபாடுகள் யாது?

( அல்லது )

செபியின் பணிகளை விவரி.

25. புறத்தோற்றமற்ற பத்திரங்களின் நன்மைகளை விவரி.

( அல்லது )

<u>குறிப்பு வரைக</u>

அ) காளை ஆ) கரடி இ) கலைமான் ஈ) முடவாத்து